**Dominic Perrottet**
Premier of New South Wales

**Paul Toole**
Deputy Premier

**Stuart Ayres**
Minister for Jobs and Western Sydney

**Brad Hazzard**
Minister for Health

**Sarah Mitchell**
Minister for Education and Early Childhood Learning

**MEDIA RELEASE**

வியாழக்கிழமை, 7 அக்டோபர் 2021

# மீண்டும் திறப்பதற்கான பாதையில் நியூ சவுத் வேல்ஸ்

70 சதவிகிதம் இரட்டை தடுப்பூசி இலக்கை அரசு கடந்துவிட்டதால், மீண்டும் திறப்பதற்கான முதல் நடவடிக்கைகளை நியூ சவுத் வேல்ஸ் எடுக்கும்.

முதல் தடுப்பூசி மைல் கல்லை (milestone) எட்டியுள்ள நிலையில், மீண்டும் திறக்கும் நியூ சவுத் வேல்ஸின் செயல்திட்டத்தின் (Roadmap) ஒரு பகுதியாக, நியூ சவுத் வேல்ஸ் அரசாங்கம் பல்வேறு கட்டுப்பாடுகளைத் தளர்த்துகிறது, இது அடுத்த திங்கட்கிழமை, அக்டோபர் 11 -ஆம் தேதி முதல், முழுமையாகத் தடுப்பூசி போட்டுள்ள பெரியோர்களுக்கு அதிக சுதந்திரத்தை அனுபவிக்க அனுமதிக்கும்.

**70 சதவிகித** செயல்திட்டத்தின் (Roadmap) மாற்றங்கள் (12 வயது மற்றும் அதற்குட்பட்ட குழந்தைகளைக் கணக்கில் சேர்க்காமல்) 10 பார்வையாளர்கள் வரை ஒரு வீட்டுக்குள் அனுமதிக்கும் (முன்பு ஐந்து), வெளிப்புறக் கூட்டங்களுக்கான உயர்ந்த பட்ச எண்ணிக்கையை 30 பேருக்கு உயர்த்தும் (முன்பு 20), மற்றும் திருமணங்கள் மற்றும் இறுதிச் சடங்குகளுக்கான உயர்ந்த பட்ச எண்ணிக்கையை 100 பேர் என அதிகரிக்கும் (முன்பு 50).

நீச்சல் பாடங்கள் (swimming lessons), குழுப் பயிற்சி (squad training), சுற்று நீச்சல் (lap swimming) மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகளுக்காக உள்ளரங்கு நீச்சல் குளங்கள் மீண்டும் திறக்கப்படும்.

**80 சதவிகித** இரட்டைத் தடுப்பூசித் தடங்கலை அரசு தாண்டி, அதற்குப் பின்வரும் திங்கட்கிழமை, மேலும் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும், அப்போது (12 வயது மற்றும் அதற்குட்பட்ட குழந்தைகள் தவிர்த்து) 20 பார்வையாளர்கள் வரை ஒரு வீட்டுக்குள் இருக்கலாம் (முன்பு 10), மற்றும் 50 நபர்கள் வரை வெளியிடத்தில் கூட்டம் கூட அனுமதிக்கப்படுவர் (முன்பு 20).

கட்டுப்படுத்தப்பட்ட மற்றும் அனுமதிச் சீட்டுடன் கூடிய வெளிப்புற நிகழ்வுகளில் 3,000 பேர் வரை (முன்பு 500) கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள், உட்கார்ந்து குடிப்பதற்கு மட்டுமே இரவு விடுதிகள் மீண்டும் திறக்க அனுமதிக்கப்படும் (நடனம் கிடையாது), மற்றும் அலுவலக கட்டிடங்களில் இனிமேல் முகக்கவசங்கள் தேவையில்லை. **70 மற்றும் 80 சதவிகிதத்தில் அனைத்து செயல்திட்டத்தின் (Roadmap) சுதந்திரங்களும் முழுமையாகத் தடுப்பூசி போடப்பட்டவர்களுக்கு மட்டுமே தொடரும்.**

**அனைத்துப் பள்ளி மாணவர்களும் இப்போது அக்டோபர் 25 -ஆம் தேதி வாக்கில், பல்வேறு கோவிட்-பாதுகாப்பு (COVID-safe) நடவடிக்கைகளுடன் பள்ளி வளாகக் கற்றலுக்குத் (on site learning) திரும்புவார்கள்**, பள்ளித் திட்டத்திற்குத் திரும்புவதற்கான இரண்டாவது மற்றும் மூன்றாவது நிலைகள் தற்போது இணைந்துள்ளன. மழலையர் பள்ளி, 1 -ஆம் ஆண்டு மற்றும் 12 -ஆம் ஆண்டு மாணவர்கள் அக்டோபர் 18 -ஆம் தேதியன்று நேருக்கு நேர் கற்றலுக்குத் (face to face learning) திரும்புவார்கள், மற்ற அனைத்து ஆண்டு மாணவர்களும் ஒரு வாரம் கழித்து அக்டோபர் 25  ஆம் தேதியன்று திரும்புவார்கள்.

வாழ்க்கை விரைவில் இயல்பு நிலைக்கு திரும்ப இயல்பறிவு (common-sense) மாற்றங்கள் உதவிடும் என்று முதல்வர் டொமினிக் பெரோட்டெட் (Dominic Perrottet) கூறினார்.

“வாழ்க்கை இயல்பு நிலைக்கு திரும்புவதற்கான திறவுகோல் தடுப்பூசிகளாகும், இன்றைய மாற்றங்கள், குடும்பம் மற்றும் நண்பர்களை மீண்டும் இணைக்க உதவிடும், குழந்தைகள் மீண்டும் பள்ளிக்குச் செல்ல உதவிடும், அத்துடன் வணிகங்கள் மீண்டும் எழும்பி, விரைவாகவும் இயங்குவதற்கும் உதவிடும்," என்று திரு பெரோட்டெட் கூறினார்.

“நியூ சவுத் வேல்ஸானது சாதனைகளை எட்டுவதற்குக் கடினமான பணிகளை மேற்கொண்டிருக்கிறது, மேலும் தடுப்பூசி போட்டுக்கொள்ளவதற்குத் தொடர்ந்து மக்கள் திரண்டு வருவது முக்கியமாகும்."

அக்டோபர் 11 முதல், **பிராந்தியப் பகுதிகளில் (regional areas) ஒரு தவணை (one dose) தடுப்பூசி போட்டுக் கொண்ட தொழிலாளர்கள் தங்கள் பணியிடத்திற்குத் திரும்ப அனுமதிக்கப்படுவார்கள்,** அத்துடன் அவர்கள் தங்கள் இரண்டாவது தவணை (second dose) தடுப்பூசி போடுவதற்கு நவம்பர் 1 வரை சலுகை வழங்கப்படும்.

பிராந்திய பகுதிகள் (regional areas) என்பவை, சிட்னி பெருநகர் (Greater Sydney), ப்ளூ மவுண்டன்ஸ் (Blue Mountains), உல்லங்காங் (Wollongong), ஷெல்ஹார்பர் (Shellharbour) மற்றும் மத்திய கடற்கரை (Central Coast) போன்றவைகளுக்கு வெளியே உள்ள இடங்களாகும்.

"இந்த நடவடிக்கையானது, பிராந்தியங்களில் வணிகங்கள் மீண்டும் திறக்கப்படுவதையும், உள்ளூர் பொருளாதாரங்கள் மீண்டும் சுறுசுறுப்பு நிலைக்குத் திரும்புவதையும் உறுதி செய்கிறது. இது அனைவருக்கும் செயல்படக்கூடிய ஒரு செயல்திட்டமாக (Roadmap) நாங்கள் ஆக்குவதை உறுதி செய்வதைப் பற்றியதாகும், ”என்று திரு டூல் கூறினார்.

இந்த மாற்றங்கள், குறிப்பாக மேற்கு சிட்னியில், அதிகமான மக்களை வேலைக்குத் திரும்ப வைக்க உதவும் என்று வேலைகள், முதலீடு, சுற்றுலா மற்றும் மேற்கு சிட்னி அமைச்சர் ஸ்டூவர்ட் அயர்ஸ் (Stuart Ayres) கூறினார்.

"நாம் இயல்பு நிலைக்குத் திரும்புவதற்கான பாதையில் இருக்கிறோம், அத்துடன் மிக முக்கியமாக, இந்த தடுப்பூசி இலக்குகளை அடைவது என்பதானது, மக்கள் குடும்பத்துடனும், நண்பர்களுடனும் மீண்டும் ஒன்றிணைந்து, தங்கள் வாழ்வின் முக்கிய தருணங்களைக்

கொண்டாடலாம், அத்துடன் வணிகங்கள் தங்கள் கதவுகளைத் திறந்து, பாதுகாப்பான வழியில் வேலைக்கு திரும்பலாம்," என்று அயர்ஸ் கூறினார்.

நியூ சவுத் வேல்ஸில் குடியிருக்கும் 12 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையோர் முன்வந்து தடுப்பூசியைப் போட்டு, நியூ சவுத் வேல்ஸ் உலகின் பாதுகாப்பான இடங்களில் ஒன்றாக இருப்பதை உறுதி செய்யவும் வழிவகுக்க வேண்டுமென சுகாதார அமைச்சர் பிராட் ஹஸார்ட் (Brad Hazzard) கூறினார்.

"70 சதவிகித இரட்டைத் தவணைத் தடுப்பூசியைப் பெறுவது என்பது முழுமையாகத் தடுப்பூசி போட்டுள்ள ஒவ்வொரு நியூ சவுத் வேல்ஸ் குடிமகனும் பெருமையுடன் அணிய வேண்டிய கௌரவப் பதக்கமாகும், ஆனால் நம்மால் இன்னும் அதிகமாச் செய்ய முடியும், மேலும் 90 சதவிகிதம் என்பது நமக்குக் கைக்கெட்டும் தூரத்தில்தான் உள்ளது" என்று திரு ஹஸார்ட் கூறினார்.

கல்வி மற்றும் ஆரம்பக் குழந்தைப் பருவக் கற்றல் துறை அமைச்சர் சாரா மிட்செல் (Sarah Mitchell) கூறுகையில், மாணவர்களை மீண்டும் வரவேற்கப் பள்ளிகள் தயாராக உள்ளன என்றார்.

"மூன்று வாரங்களுக்குப் பதிலாக இரண்டு வாரங்களுக்குள் மாணவர்கள் விரைவாக திரும்பும்போது, அவர்களை வரவேற்கத் தயாராவதற்குப் போதுமான நேரத்துடன், பள்ளிகள் பாதுகாப்பாகவும் விவேகமாகவும் உள்ளன" என்று மிட்செல் கூறினார்.

"முதல்வர்கள் தங்கள் பள்ளியில் கோவிட் பாதுகாப்பு அமைப்புகளை உறுதி செய்வதற்குத் தேவையான அனைத்து விரிவான வழிகாட்டுதல்களையும், சரிபார்ப்புப் பட்டியல்களையும் பெற்றுள்ளனர். பெற்றோர்களும், பராமரிப்பாளர்களும் கூட ஒரு விரிவான வழிகாட்டியை இன்றைக்கும், மற்றும் தங்கள் பள்ளியில் இருந்து மேலும் குறிப்பிட்ட தகவல்களை இனிவரும் நாட்களிலும் பெறுவார்கள்."

நீங்கள் கோவிட் -19 தடுப்பூசி போட்டுக்கொள்ள முன்பதிவு செய்யவில்லை என்றால், விரைவில் தயவுசெய்து ஒரு சந்திப்பு ஏற்பாட்டுக்குப் பதிவு செய்து கொள்ளவும்.

வீட்டிலேயே தங்கியிருக்க வேண்டும் (stay-at-home) என்ற உத்தரவுகள், வரும் திங்கட்கிழமை நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக செயல்திட்ட (Roadmap) அமைப்புகளாய் மாற்றப்படும் என்பதால், கவலைக்குரிய உள்ளூர் அரசுப் பகுதிகளின் (Local Government Areas of concern) பட்டியல் இருக்கப் போவதில்லை என்பதையும் குறித்துவைத்துக் கொள்ளவும்.

சமீபத்திய தகவல்களுக்கு nsw.gov.au என்ற இணையதளத்திலுள்ள கோவிட்-19 பக்கங்களுக்குச் செல்லவும்

**MEDIA: Ian Paterson | Premier | 0438 478 501**
**Ella Smith | Deputy Premier | 0428 745 348**
**Sophie Hull | Minister Ayres | 0447 583 756**
**Julie Garvey | Minister for Health | 0448 569 746**
**Michael Fairbairn | Minister for Education | 0417 785 910**